இன்றைக்கு போர்க்கால அடிப்படையிலே அனைத்து ஆய்வுப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ.கே. சின்னராஜ், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: ஆய்வுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டிருக்கிற அந்தத் திட்டத்தின் அவசர அவசியத்தைக் கருத்திற்கொண்டு இந்த நிதியாண்டிலேயே அதை வேகமாக, நடைமுறைப்படுத்தித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கேட்ட கோரிக்கை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம், அவரும், நாங்களும் கேட்டு, விதி 110—ன்கீழ் அறிவித்தார்கள். அது அவசியமான ஒன்றென்பது அங்கிருக்கக்கூடிய மக்களுடைய கோரிக்கை. ஏனெனில், கோயம்புத்தூர் பகுதியிலுள்ள எல்லா இடங்களுக்கும் அங்கிருந்துதான், முக்கியமாக, பில்லூர் I, II scheme—மூலம்தான் குடிநீர் வருகிறது. அதைப்போல, திருப்பூர் மாவட்டத்திற்கும், பல்லடம் பகுதிக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது. இது முக்கியமான திட்டம் என்பதால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக அதை அறிவித்தார்கள். அதற்கு 91.70 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டுவிட்டது. உறுப்பினர் கேட்ட அந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இந்த ஆண்டிலேயே டெண்டர் விடப்பட்டு, உடனடியாக அந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜுன் 16]

23—

குளிர்பதனக் கிடங்கு

***1183—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இடிந்தகரையில் மீன்களைப் பதப்படுத்த குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

திருநெல்வேலி மாவட்டம், இடிந்தகரையில் மீன்களைப் பதப்படுத்த குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்த கேள்வியில் வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழவேற்காடு தொடங்கி கன்னியாகுமரி வரை நீண்டுகிடக்கிற தமிழகக் கடற்கரையோரம், அலைவீசும் கடலில் வலைபோட்டு வாழும் மீனவர்களுடைய நலன் காக்கிற, மீனவ நண்பன் என்று போற்றப்படுகிற அரசுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் பெயர் சொல்கிற இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) நெல்லை மாவட்டத்திலே, எனது ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி, கடற்கரை கிராமங்களைக் கொண்ட தொகுதியாகும். என்னுடைய தொகுதியில் இருக்கிற ஓரிரு கிராமங்களைத் தவிர, அனைத்துக் கிராமங்களிலும் தூண்டில் வளைவுகளை அமைத்துத் தந்தது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. இடிந்தகரையிலே பிடிக்கப்படுகிற மீன்கள்தான் மிக ருசியான மீன்கள்; தமிழகத்திலே மிக ருசியான மீன்கள் கிடைக்கிற பகுதி இடிந்தகரை என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். எனவே, கூடங்குளம் அருகிலே இருக்கிற இடிந்தகரையில் குளிர்பதனக் கிடங்கு வசதி*

ஏற்படுத்தித் தந்தால் ஏற்றுமதி அதிகரிக்கும், அந்தப் பகுதியில் இருக்கிற மீனவர்களுடைய வாழ்வாதாரம் சிறக்கும் என்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மீனவர்களின் நலன் காக்கிற அரசு என்பதால் இதை மீண்டும் பரிசீலித்து, உடனடியாக இந்த அரசு அமைத்துத் தரும் என்ற நம்பிக்கையோடு இந்தக் கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசிடம் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ.எஸ். இன்பதுரைக்கு என்னுடைய கோரிக்கை ஒன்று. சுவையான மீன் என்று சொன்னீர்கள். அனைத்து உறுப்பினர்களுக்கும் அவை கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்வீர்களா?

திரு. ஐ.எஸ். இன்பதுரை: நிச்சயமாக ஏற்பாடு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய கோரிக்கையை ஏற்று, என்னுடைய துறை சார்ந்த மானியக் கோரிக்கையின்போது அனைவருக்கும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த மீன்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (சிரிப்பு) (குறுக்கீடு) பொரித்ததா, குழம்பு வைத்ததா அல்லது பச்சை மீனா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்தோடு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்தாண்டுக் கால ஆட்சியிலே, 1,105 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன்மூலம்தான் நம்முடைய மீனவர்களுடைய வாழ்வாதாரம் மற்றும் அவர்களுடைய பொருளாதார நிலை உயரும் என்பதை மனதில் கொண்டு, 1,105 கோடி ரூபாயில் தூண்டில் வளைவுகள், மீன் பதனிடும் பூங்காக்கள், சிறிய துறைமுகங்கள், தங்குதளங்கள் போன்றவற்றையெல்லாம் அமைத்து ஒரு வரலாற்றுச் சாதனையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்படுத்தியது.

2017 ஜூன் 16]

முற்பகல் 10–30

கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதிக்கு ரூ.87 கோடி உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், அதுபோன்ற பல்வேறு வசதிகளுக்கும் சேர்த்து ரூ.97 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நம்மைப் பொறுத்தவரை பிடிக்கப்படுகின்ற மீன்கள் சுகாதாரமான முறையில் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். சாதாரணமாக மீன் விலை உயரும்போது மீனவர்களின் வாழ்வாதாரம் உயரும் நிலை இருக்கிறது. இதனை மனதிற்கொண்டுதான், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மீன் பதனிடும் பூங்காக்களை கன்னியாகுமரி, இராமநாதபுரம், நாகப்பட்டினம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அமைக்க ஆணையிட்டு, அப்பணிகள் நடைபெற்று வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் மீன் பதனிடும் பூங்கா அமைப்பதில் எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை; அமைக்கலாம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனியார் பங்களிப்புடன் மீன் பதனிடும் பூங்கா அமைக்க முன்வருவோரை அடையாளம் காட்டுவாரேயானால், நிச்சயமாக அந்தத் தொகுதியில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைக்க அரசு எல்லா உதவிகளையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரவிருக்கும் மீன் வளத் துறை மானியக் கோரிக்கையின்போது, மீன் விருந்து வைப்பேன் என்று மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, எங்கள் தொகுதி மக்கள் சந்தோஷப்படுகிற அளவிற்கு இந்த அறிவிப்பையும் சேர்த்து பந்தி வைப்பார் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*